பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**24 12 2025** **6 45**

புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

**1.** மக்களவையில் மாநில மொழிகளில் அதிக அளவில் விவாதங்கள் நடைபெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம், கிராமப்புறங்களை சிறப்பாக மாற்றி அமைக்கும் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

**3.** சிறுபான்மையினர் நலனுக்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலன் கூறியுள்ளார்.

**4.** தமிழகத்தில் திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி விட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. இலங்கைக்கு எதிரான இரண்டாவது மகளிர் டிவெண்ட்டி டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தாயாசத்தில் வெற்றி பெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மக்களவையில் மாநில மொழிகளில் அதிக அளவில் விவாதங்கள் நடைபெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பான சமூக வலைதளத்தில் அவர் ஒரு நாளிதழின் இணையதள கட்டுரையைப் பகிரிந்துள்ளார்.

அதில், அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடரில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 160 உரைகளை மாநில மொழிகளில் நிகழ்த்தி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக 50 உரைகள் தமிழில் நிகழ்த்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய காலங்களில் மொழிபெயர்ப்பு வசதிகள் முறையாக இல்லாத காரணத்தால், உறுப்பினர்கள் பிராந்திய மொழிகளில் பேசுவதில் சிக்கல்கள் இருந்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 22 மொழிகளில் நேரலை மொழி பெயர்ப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அதிக உறுப்பினர்கள் தங்களது தாய்மொழியில் உரையாற்றி வருவதாக பிரதமர் பகிர்ந்துள்ள அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் இது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

கலாச்சார மற்றும் மொழியியல் பன்முகத்தன்மையே இந்தியாவின் பெருமை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வாய்ப்பை ஏற்படுத்திய அவைத் தலைவர் திரு ஓம் பிர்லாவுக்கும், தாய்மொழியில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவிப்பதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம், கிராமப்புறங்களை சிறப்பாக மாற்றி அமைக்கும் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தானின் வேளாண் மாநாட்டில் பேசிய அவர், புதிய திட்டத்தில் ஆண்டுக்கு 125 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்படுவதாக கூறினார்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் இத்திட்டத்திற்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டதாகவும், தற்போது ஆண்டுக்கு ஒரு லட்சத்து 11 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ஒரு லட்சத்து 51 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டம் தொடர்பாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பொய்யான தகவல்களைப் பரப்பி வருவதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், சென்னையில் மக்கள் மாளிகையில் ஆளுநர் திரு ஆர்.என். ரவியை நேற்று சந்தித்துப் பேசினார்.

சிறு, குறு நிறுவனங்களை வலுப்படுத்துவது குறித்தும், முதலீடுகள் குறித்தும் ஆளுருடன் ஆலோனை நடத்தியதாக சமூக வலைதளத்தில் அமைச்சர் தெரித்துள்ளார்.

தமிழகத்தின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை நிலவரம் குறித்து ஆக்கப்பூர்வமான கலந்துரையாடலை ஆளுநருடன் மேற்கொண்டதாக திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது மத்திய இணையமைச்சர்கள் திரு அர்ஜுன் ராம் மேக்வால், டாக்டர் எல். முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

<<<<>>>>

சிறுபான்மையினர் நலனுக்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலன் கூறியுள்ளார்.

சென்னை திரு.வி.க. நகரில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், சிறுபான்மையின மாணவர்களின் நலன் கருதி சென்னை மற்றும் கோவை மாவட்டங்களில் புதிய விடுதிகள் திறக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மாநிலத்தில் 44 தேவாலயங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கல்லறைத் தோட்டங்களில் நிலவிய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற, திமுக அரசு தவறி விட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், நாமக்கல் பகுதியில் முட்டை குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும், மரவள்ளிக்கு ஆதார விலை வழங்கப்படும், கூட்டுறவு அமைப்புகள் மூலம் நூல் கொள்முதல் செய்யப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றார்.

தமிழகத்தில், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தமிழககத்தின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு இதுவரை 14 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

ஆனால் மத்திய அரசுடன் திமுக அரசு தொடர்ந்து மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழகத்தில் திமுக அரசு புதிய திட்டங்கள் எதையும் செயல்படுத்தவில்லை என்று திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

கிறிஸ்துமஸ் மற்றும் அரையாண்டுத் தேர்வு விடுமுறையை ஒட்டி சென்னையில் இருந்து வெளியூர் செல்லும் பயணிகளின் வசதிக்காக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இதனையொட்டி சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Sureka - 51 Sec)**

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி தமிழகத்தில் மேலும் வலுவடையும் என்று தமாகா தலைவர் திரு ஜிகே வாசன் கூறியுள்ளார்.

அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி அடுத்த ஓரிரு மாதங்களில் முழுமை பெறும் என்றார்.

வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் இந்தக் கூட்டணி மிகப் பெரிய வெற்றியைப் பெறும் என்று திரு ஜிகே வாசன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

தாய்லாந்து மற்றும் கம்போடியா இடையே சண்டை நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை தாய்லாந்தின் சாந்தாபுரியில் இன்று நடைபெற உள்ளது.

---------------

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஆக்ராவில் இன்று நடைபெறும் நாடாளுமன்றத் தொகுதி விளையாட்டு விழாவின் பரிசளிப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளார்.

---------------

பிரதமர் திரு. நரேந்திர மோடியை, அவரது இல்லத்தில் ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ரா நேற்று சந்தித்துப் பேசினார்.

---------------

பிரபல இந்தி எழுத்தாளரும் ஞானபீட விருது பெற்றவருமான வினோத் குமார் சுக்லாவின் மறைவுக்கு, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

---------------

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா ஹரியானா மாநிலத்தில் புதிதாக பணியில் இணையும் 5 ஆயிரம் காவலர்கள் பங்கேற்கும் அணிவகுப்பில் இன்று பங்கேற்கிறார்.

---------------

மறைந்த முன்னாள் பிரதமர் பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாயின் பிறந்த தினம் நாளை கொண்டாடப்பட்டவுள்ளதையொட்டி லக்னோவில் இன்று நடைபெறும் கவிதை வாசிப்பு நிகழ்ச்சியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்கவுள்ளார்.

---------------

மத்திய பணியாளர் நலன் மற்றும் ஓய்வூதியத் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தலைமையில், ஓய்வூதியர்களுக்கான சிறப்பு குறைதீர்ப்பு முகாம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

---------------

பெரியாரின் **52**-வது நினைவு நாளும் தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரனின் **38**-வது நினைவு நாளும் இன்று அனுசரிக்கப்படுகிறது.

---------------

தமிழக பூமிதான வாரியத்தின் தலைவரும் மாநில அமைச்சருமான திரு. காந்தி தலைமையில் **6**-வது பூமிதான வாரியக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

---------------

உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள், பணியிட மாறுதலுக்காக

இன்று முதல் வரும் 5-ம் தேதி வரை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

---------------

அலுமினிய பொருட்களுக்கான தரக் கட்டுப்பாடு குறித்து, கோவையில் இந்திய தர நிர்ணய அமைப்பின் சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

---------------

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பேரூராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. எம். கோவிந்தராவ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---------------

சென்னை சங்கமம் நிகழ்ச்சியை நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாநில செய்தி மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

---------------

*விளையாட்டுச் செய்தி*

**இலங்கைக்கு எதிரான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தாயாசத்தில் வெற்றி பெற்றது.**

**விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 128 ரன் எடுத்தது.**

**பின்னர் களமிறங்கிய இந்தியா, 11 புள்ளி 5 ஓவலில் 3 விக்கெட் இழப்புக்கு 129 ரன் எடுத்து வெற்றி பெற்றது.**

**<<<<The End>>>>**